கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எந்த மாதிரியான ரிப்போர்ட்டும் கிடையாது. ஜியலாஜிகல் சர்வேயிலிருந்து எந்த மாதிரியான ரிப்போர்ட்டும் சர்க்காருக்கு வரவில்லை.

அரசினர் விருந்தினர் விடுதி

* 744 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் விருந்தினர் விடுதியின் சென்ற ஆண்டின் செலவுகள் எவ்வளவு?

(இ) செலவின் விளக்கம் சபைக்கு அறிவிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) The expenditure incurred in the State Guest House during 1961-62 is Rs. 48,041.62 nP.

(இ) A statement[a] is placed on the table of the House.

Mica (Kanyakumari district)

* 745 Q.—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are any Mica deposits in the Vilavancode taluk in the Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir. Mica is reported to occur in the following places in Vilavancode taluk of Kanyakumari district:—

1. Appiodu;
2. Nattalam; and
3. Midalakulam.

Further investigation of these deposits is in progress.

திரு. கே. மூக்கையா தேவர்: சார், மதுரைக்குப் பக்கத்திலுள்ள போடிநாயக்கனூரிலே மைக்கா கிடைப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

இலவசப் படிப்பு

* 746 கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பத்தாவது வகுப்புவரை இலவசப் படிப்பு என்ற திட்டம் முற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், செல்வர், வறியோர் ஆகிய அனைவருக்குமே கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: During 1961-62, full tution fee concession was extended to all poor pupils studying in classes up to and inclusive of X Standard irrespective of caste or community provided the gross annual income of their parents or

[a] Printed as Appendix III on 743.

28th July 1962]

guardians did not exceed Rs. 1,200. From the current academic year the Government have raised this annual income limit to Rs. 1,500. There is no proposal to dispense with the income limit.

திரு. வை. சங்கரன் : கர்ணம், கிராம முன்சீப் ஆகியோர்களிட மிருந்து பாவர்டி சர்டிபிகேட் வாங்கும்பொழுது ஏற்படக்கூடிய கஷ்டங்களை சர்க்கார் அறிந்திருக்கிறார்களா ? அதைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ? 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இதிலே தவறுதல் இல்லாமல், உள்ள நிலைமைக்கேற்றவாறு அத்தாட்சி கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு யாரை வைத்துக் கொடுப்பது என்பது தான் இப்பொழுது பிரச்னை. இதிலே ஏதாவது மாறுதல் செய்யக் கூடுமானால் அதை அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனித்து வேண்டியதைச் செய்யும்.

Pre-University Course.

* 747 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :—

(*a*) the number of applications received in Government Colleges for admission to Pre-University Course during 1961-62; and

(*b*) the number of students admitted ?

The Hon. Sri M. BHATAVATSALAM : (*a*) 4,728 Sir.

(*b*) 2,606.

Medical Officers (age of retirement)

* 748 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether the Government have received any representation from Madurai Medical Association in regard to raising of the age of retirement of Medical Officers to sixty; and

(*b*) if so, the action taken thereon ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) No Sir.

(*b*) Does not arise.

பஞ்சாயத்து யூனியன்கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் (மாற்றுதல்)

* 749 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்துக் கூட்டு மன்ற ஆணையாளர் ஆசிரியர்களை எந்தெந்தக் காரணங்களுக்காக மாற்றலாம் ?